

கோவை மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண் 27, பீளமேடு ஆவாரம்பாளையம் சாலையில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 22.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையத்தினை கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் முன்னிலையில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் திறந்து வைத்தார். இதில் மாநகராட்சி மேயர் கா. ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், துணை மேயர் வெற்றிச்செல்வன், மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தனபால், மாமன்ற உறுப்பினர் அம்பிகா தனபால் உள்பட கழக நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஆவடி மாநகராட்சி – திருமுல்லைவாயல் அராபத் ஏரியில் முதற்கட்டமாக

# ரூ.2 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ள புனரமைப்பு பணிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார்!

திருவள்ளூர், நவ.14-

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட திருமுல்லைவாயல் பகுதியில் அராபத் ஏரியில் முதற்கட்டமாக ரூ.2 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ள புனரமைப்பு பணிகளை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் துவக்கி வைத்து, கல்வெட்டினை திறந்து வைத்து, பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து, சோழம்பேடு பிரதான சாலை, கணபதி நகர் பகுதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தினை திறந்து வைத்து, அவ்வழி தடத்தில் செல்லும் சிற்றுந்து சேவையை தொடங்கி வைத்து பொது மக்களுடன் பயணித்தார்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் அவர்கள் கூறியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி திருவள்ளூர் மாவட்டம், ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இன்று ஆவடி மாநகராட்சிகுட்பட்ட திருமுல்லைவாயில் பகுதியில் நீண்ட நாள் கோரிக்கையான அராபத் ஏரி புனரமைப்பு பணிகள் நடைபாதையுடன் கூடிய பசுமை பூங்கா மிக விரைவில் அமைக்கப்பட உள்ளது. தமிழக அரசின் நகராட்சி செயல்திறன் மதிப்பீட்டு முறையின் அடிப்படையில், மாநிலம் முழுவதும் உள்ள 38 மாவட்டங்களில் செயல்படும் 24 மாநகராட்சிகளில் இருந்து, நிர்வாக திறன். பொதுசேவை வழங்கல், நிதி செயல்திறன், சுத்தம் மற்றும் சுகாதார மேலாண்மை, மக்கள் நலத் திட்டங்களின் செயலாக்கம் போன்ற முக்கிய குறியீடுகளின் அடிப்படையில் சிறந்த மாநகராட்சி தேர்வு செய்யப்படுகிறது. 2025-2026ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான திறன் மதிப்பீட்டில் ஆவடி மாநகராட்சி முதலிடம் பிடித்துள்ளது. இந்த சிறப்பை முன்னிட்டு,

முதலமைச்சர் அவர்களால் 15.08.2025 அன்று ரூ50.00 இலட்சம் முதல் பரிசுத் தொகையும், சிறந்த மாநகராட்சி விருதும் ஆவடி மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது. ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம்2. வார்டு எண் 28. திருமுல்லைவாயல் பகுதியில் அமைந்துள்ள சர்வே எண் 567ல் உள்ள அராபத் ஏரியை முழுமையாக புனரமைத்து, நடைபாதையுடன் கூடிய பசுமை பூங்காவாக உருவாக்கும் பணிகள் திட்ட மிடப்பட்டு ள்ளன. இத்திட்டம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் நாடாளு மன்ற உறுப்பினர் நிதி 20252026. ரூ.50.00 இலட்சம் ஆவடி சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 20252026. ரூ.50.00 இலட்சம் நிறுவன சமூகப் பொறுப்பு (CER) 2025-2026 மற்றும் ரூ.50.00 இலட்சம் சிறப்பு நிதி என மொத்தம் நான்கு தனித்த நிதி மூலங்களின் கீழ் மொத்தம் ரூ200.00 இலட்சத்தில் செயல்படுத்தப்பட உள்ளது.

26.40 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ஏரியை சுற்றிவரும் 2.996 கிலோமீட்டர் நீளத்தில் நடைபாதை அமைத்தல். குழந்தைகளுக்கான நவீன விளையாட்டு உபகரணங்கள். திறந்த வெளி உடற்பயிற்சி கூடம், உணவு அரங்கம், உயர் தர மின்விளக்குகள். யோகா மையம், நூலகம் மற்றும் போதிய வாகன நிறுத்து மிடம் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நல வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன. மண்டலம்2. வார்டு எண் 23ல், சோழம்பேடு (கண்ணன் திரையரங்கம் அருகில்) பகுதியில், சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிழற்குடை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ஆவடி மாநகராட்சியின் பொது விளக்கு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், மக்கள் நெரிசல் அதிகம் காணப்படும் முக்கிய சாலை சந்திப்புகள் மற்றும் பொதுப் பயன்பாட்டு பகுதிகளில் உயர்கோபுர மின் விளக்குகள் (High Mast Lights) புதியதாக நிறுவப்பட்டு ள்ளன. கீழ்க்காணும் எட்டு முக்கிய இடங்களில் இவ்விளக்குகள் நாடாளுமன்ற உறுப்பினர் 2024-25 நிதியில் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. உயர் கோபுர மின் விளக்கு அமைக்கப்பட்டுள்ள இடங்கள்: 15வது வார்டு கக்கஞ்சி நகர் அண்ணா தெரு, 16வது வார்டு சந்தைதெரு பகுதியில், 37வது வார்டு சேக்காடு பகுதி நுழைவுவாயில், 9வது வார்டு திருமுல்லை வாயில் காலனி திருவள்ளு வர் தெரு, 35வது வார்டு ஆவடி ரயில் நிலையம்அருகில், 47வது வார்டு ஸ்ரீராம் நகர் நுழைவுவாயில் பிரதான சாலையில், 33வது வார்டு தட்டாங்குளம் குடியிருப்புபகுதி, 33வது வார்டு ரெட்டிப்பாளையம் பகுதிகளில் ரூ.34.8 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் சா.மு.நாசர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.சசிகாந்த் செந்தில் ஆவடி மாநகராட்சி மேயர் உதய குமார் ஆவடி மாநகராட்சி ஆணையாளர் ரா.சரண்யா, ஆவடி மாநகராட்சி மண்டல குழுத் தலைவர்கள் அமுதா பேபிசேகர், ஜோதி லட்சுமி, வி. அம்மு, மாநகர பகுதி செயலாளர்கள் சன் பிரகாஷ் பேபி சேகர், பொன்.விஜயன், ஜி. நாராயண பிரசாத், ஆவடி மாநகராட்சி துணை ஆணையர் மாரிச் செல்வி, மாநகராட்சி பொறியாளர் பி.வி.ரவிச் சந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உத்திரமேரூர் தொகுதி – புதூர் மேல்பாக்கம் கிராமத்தில்

# புதிய வழித்தடத்தில் பேருந்து சேவை: க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

## க.செல்வம் எம்.பி. – கெ.ஞானசேகரன் பங்கேற்பு!

காஞ்சிபுரம், நவ. 14-

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் தொகுதியில் பொதுமக்களின் கோரிக்கையின்படி புதிய வழித் தடத்தில் அரசு பேருந்து சேவையை காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. நேற்று தொடங்கி வைத்தார். இதில் க.செல்வம் எம்.பி. ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் புதூர் மேல்பாக்கம் கிராம பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று இதுவரை அரசு பேருந்து செல்லாத புதிய வழித்தடத்தில் தடம் எண் T34 A என்ற பேருந்து வசதியை மக்கள் பயன்பாட்டிற்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் மற்றும் காஞ்சிபுரம் பாராளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க.செல்வம் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் உத்திரமேரூர் ஒன்றிய கழக செயலாளரும் ஒன்றிய குழு உறுப்பினருமான கெ.ஞானசேகரன், பேரூர் கழக செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி மன்ற தலைவர் பி.சசிகுமார் மாவட்ட கவுன்சிலர் திருமதி பத்மா பாபு. ஒன்றிய கழக துணை செயலாளரும் ஒன்றிய குழு உறுப்பினர் தயாளன் என்கின்ற ருத்திரக் கோட்டி, ஒன்றிய கவுன்சிலர் அண்ணாதுரை, மேல்பாக்கம் கிராம ஊராட்சி மன்ற தலைவர் அஞ்சலி சம்பத் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகே பட்டீஸ்வரத்தில் தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, இந்துசமய அறநிலையத்துறை தேனுபுரீஸ்வரர் திருக்கோயில் சார்பில் 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த தம்பதியினருக்கு சிறப்பு செய்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 40 மூத்த தம்பதியினருக்கு புதிய உடைகள், மங்கலப் பொருட்கள் அடங்கிய பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கோயில் செயல் அலுவலர் நிர்மலாதேவி, புவனேஸ்வரி கல்யாணசுந்தரம், மருத்துவர் பழனிவேல் மற்றும் கோயில் நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்று சிறப்பித்தனர்.

### அரசாங்கத்தைக் கட்டமைக்கக் கூடிய அடிப்படை உரிமையான

# ஜனநாயக வாக்குரிமையை பறிக்கும் திருடர்களை விடக்கூடாது!

## பெரம்பலூர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆ.இராசா எம்.பி. பேச்சு!

பெரம்பலூர், நவ.14-

பெரம்பலூர் மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையம் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு மேற்கொண்டு வந்துள்ளது. சிறுபான்மையினர் வாக்குகள், பட்டியலின மக்களின் வாக்குகள் மற்றும் பா.ஜ.க.வின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றை குறிவைத்து நீக்கும் நோக்கோடு தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களை சேர்க்கும் சதித்திட்டத்தோடு ஒன்றிய பா.ஜ.க. அரசு தனக்கும் பாதுகாவலனாக வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் இதனை செய்திட முயன்றிருப்பதோடு, பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் கலையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர்(SIR) திட்டத்தை செயல்படுத்தி மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழிதோண்டி புதைப்பதாகவும் உள்ளது. இதனைக் கண்டிக்கும் வகையில் பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் வரவேற்புரையில், பழைய பேருந்து நிலையத்தில் உள்ள காந்தி சிலை அருகில் நடைபெற்ற மாபெரும் கன்டண ஆர்ப்பாட்டத்தில் மேனாள் ஒன்றிய அமைச்சர் கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா. எம்.பி., கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பா.ஜ.க. அரசைக்கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது. ஆ.இராசா.எம்.பி., பேசுகையில்

வாக்குத் திருட்டை எதிர்த்து வடக்கே ராகுல் காந்தி என்றால்,தெற்கே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் குரல் கொடுக்கிறார்.

இந்திய குடியரசுக்கு



ஆபத்து வந்துள்ளது. அரசாங்கத்தைக்கட்டமைக்கக் கூடிய வாக்குரிமையை பறிக்கும் வாக்குத்திருடர்களை விடக்கூடாது என்றும் அனைத்துமே கெட்டு குட்டுசுவராகிவிட்டது பொறுத்துக்கொண்டோம், தற்போது ஜனநாயகத்திற்கு பெரிய ஆபத்து வந்துள்ளது அதனை விடமுடியாது என்றும் பேசினார்.

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தங்க. சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே. அருண், மாநில ஆதிதிராவிடர் நல குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு அட்சயகோபால்,

வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், செ. அண்ணாதுரை, பட்டுச்செல்விராஜேந்திரன், டி.கே. ராமச்சந்திரன்,

ஆர். முருகேசன், மாவட்ட அவைத்தலைவர் அ. நடராஜன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் டி.சி பாஸ்கர், சன்.சம்பத், நூருல்ஹிதா இஸ்மாயில், மாவட்ட கழக பொருளாளர் செ. ரவிச்சந்திரன், காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் சுரேஷ், ம.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் டாக்டர் ரொஹையா, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநில விவசாய அணி தலைவர் வீர. செங்கோலன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில குழு உறுப்பினர் சாமி.நடராஜன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் வீ.ஞானசேகரன்,

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி மாநிலத் துணைச் செயலாளர் திருச்சி வி.எம். பாரூக், இஷான் சங்கம் மாநில தலைவர் அ.அப்துல் ஹாதி, தமிழக விவசாய தொழிலாளர் கட்சி எம். நெடுஞ்செழியன், இந்திய தொழிலாளர் கட்சி பி.ஆர். ஈஸ்வரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் பெ.ரமேஷ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் வி.ஜெயராமன், ம.தி.மு.க.மாவட்ட செயலாளர் செ.ஜெயசீலன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மேற்கு மாவட்ட செயலாளர் எம்.கே.எஸ்.ரத்தினவேல், விடுதலை சிறுத்தைகள் கட்சி கிழக்கு மாவட்ட செயலாளர் ஆ.கலையரசன்,ஐ.யு.எம்.எல்.மாவட்ட செயலாளர் சர்புதீன், திராவிடர் கழக மாவட்ட தலைவர் சி.தங்கராசு, எம்.ஜி.ஆர் கழகம் மாவட்ட செயலாளர் சக்திவேல், சி.ஐ.டி. யு. ஆட்டோ சங்கம் சண்முகம், கரும்பு விவசாயிகள் மாவட்ட தலைவர் ஏ.கே.ராஜேந்திரன், மனிதநேய கட்சி மாவட்ட செயலாளர் எம். முஜீர்ஹமான், மனித நேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் அ.குதரத்துல்லா, மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் முகமது இலியாஸ் அலி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்ட செயலாளர் ரவி, கிறிஸ்துவ நல்லெண்ண இயக்க மாவட்ட செயலாளர் பா.ரினோபாஸ்டின், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி மாவட்ட பொறுப்பாளர்கள் இளையப்பன், வேலப்பன் தமிழ் புலிகள் கட்சி மாவட்ட செயலாளர் குறல்வள்ளுவன், சிவசேனா கட்சி மாவட்ட செயலாளர் ப.பரஞ்சோதி, மக்கள் நீதி மையம் மாவட்ட தலைவர் முத்துக்குமார், உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய கழகச் செயலாளர் என். கிருஷ்ணமூர்த்தி, எம். இராஜ்குமார், செ. நல்லதம்பி, தி.மதியழகன், சி. ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ. வல்லபன், ந.ஜெகதீஸ்வரன், அழகு.நீலமேகம், பேரூர் கழகச் செயலாளர் எம்.வெங்கடேசன், ஆர். ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், டி.ஆர்.சிவசங்கர், மா.பிரபாகரன், தொ.மு.ச.மாவட்ட கவுன்சில் பேரவை தலைவர் கே.கே. எம்.குமார்,

தொ.மு.ச.மாவட்ட கவுன்சில் பேரவை செயலாளர் ஆர்.ரெங்கசாமி,

மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன்,

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ)அப்துல்பாரூக், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. இராசா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர்.குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அருண், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் ஆர். சுந்தர்ராஜ், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம். மணிவாசகம், வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் உள்ளிட்ட 5 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

# நாகையில் எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக இந்தியா கூட்டணிக் கட்சியினர் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கண்டன முழக்கம்!

நாகை. நவ.14-

தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தை கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கடந்த 11ம் தேதி நாகையில் அவுரித்திடலில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த வை.செல்வராஜ் எம்.பி., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த நாகை மாலி எம்.எல்.எ., ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து வரவேற்றார். ஆர்ப்பாட்டத்தில் நாகை மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் தலைமை தாங்கி கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், கழகத்தின் கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் இரா.சங்கர், கூட்டணி கட்சி தலைவர்கள் மார்க்சிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் இரா.மாரிமுத்து, திராவிடக் கழக மாவட்டச் செயலாளர் புபேஸ்குப்தா, ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் ஸ்ரீதரன், காங்கிரஸ் கட்சி மாவட்டத் தலைவர் அமிர்தராஜா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சிவகுருபாண்டியன், திராவிடக் கழக மாவட்டதலைவர் ஏ.நெப்போலியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் அருள்செல்வன், மக்கள் நீதி மய்யம் மாவட்டச் செயலாளர் அனஸ், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் செய்யது அலி, இப்ராஹிம், மனித நேய மக்கள் கட்சி இப்ராஹிம், முகமதுசலீம், மனித நேய ஜனநாயக கட்சி தாஜுதீன், முன்சியூசுப்தீன், தமிழக வாழ்வுரி கட்சி முகம்மதுஅலி, சமத்துவ மக்கள் கழகம் ஆரோக்கியதாஸ், குமரேசன், சிவசேனா கட்சி மாநில பொதுச் செயலாளர் சுந்தரவடிவேலன், செந்தில் குமார், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், கழக தீர்மானக் குழு உறுப்பினர் என். வி.காமராஜ், தலைமைக் கழக வழக்கறிஞர் மு. தினேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.இராஜேந்திரன், இல.மேகநாதன், க.மறைமலை, மாவட்டக் கழக அவைத்தலைவர் ப. செல்வம், பொருளாளர் மு. லோகநாதன், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்.மணிவண்ணன், கற்பகம்நீலமேகம் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், கே.பழனியப்பன், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், சோ.பா. மலர்வண்ணன், உதயம் வே.முருகையன், என்.சதாசிவம், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர். செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர்கள் கா. அட்சயலிங்கம், மரியசார்லஸ், எஸ். பன்னீர்செல்வம், உமாசெந்தாமரைசெல்வன், கோ.சிவக்குமார் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, ப.உயக்குமார், இரா.முருகையன், ஆர்.துரைராஜ், கேஸ் வி. செந்தில், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், நகராட்சி, பேரூராட்சி உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள் மற்றும் கூட்டணி கட்சியினர் உள்ளிட்ட 4,000த்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.அ. ஜின்னா

### நவம்பர் 14 (2022)



**பேறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் உற்ற நண்பராக, சிறந்த வழக்கறிஞராக விளங்கியவர்.**

**சென்னை சட்டக் கல்லூரி தமிழ் மன்றத் துணைத் தலைவராக இருந்தபோது, எதிரெதிர் துருவங்களான பேரறிஞர் அண்ணாவையும், மூதறிஞர் இராஜாஜியையும் ஒரே மேடையில் அமர வைத்து இந்தி திணிப்பிற்கு எதிராக பேச வைத்தவர்.**

**கழகத் தலைவர் அவர்கள் , மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்ட போது, அவருடன் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**கழக மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றி, கழகத்தின் குரலை நாடாளுமன்றத்தில் ஒலித்தவர்.**

**தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலை வடித்து, அதனை சென்னை சட்டக் கல்லூரி வளாகத்தில் நிறுவியவர்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.